யுடன் யோசித்துச் செய்யவேண்டியதாக இருக்கிறது. அதனால் நாங்கள் அந்தக் கோரிக்கைகளை அவர்களுக்கு சமர்ப்பித்திருக்கிறோம்.

SRI T. T. DANIEL : May I know whether it is the object of the Government to admit all the students in G.C.I.M. College to the First Year M.B.B.S. course or whether their policy is only to admit I Year and II Year students of G.C.I.M. course and if so what will be the position of those students who have completed their III Year or IV Year ?

THE HON. SRI M. A. MANICKAVELU : That is the exact question which the hon. Member opposite has just now put and I have answered it. This is a matter to be taken up with the University of Madras.

SRI K. VINAYAKAM : What is to happen to such of those who have finished their G.C.I.M. course and who are anxious to qualify themselves for M.B.B.S.? Will all of them be given an opportunity to qualify themselves for the course which would be fixed by Government or by University, at a time or in batches?

THE HON. SRI M. A. MANICKAVELU : These students joined the G.C.I.M. College with their eyes wide open and know what that course was. Now they want some facility to round up their course by a short-term condensed course. That is a matter to be considered. They cannot as a matter of right claim that.

Kodikkarai-Vedaranyam road

* 328. *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1955-ம் வருடத்தில் வீசிய கொடும் புயலின்போது அனுமதிக்கப்பட்ட கோடிக்கரை-வேதாரண்யம் ரஸ்தாவேலை எப்போது துவங்கி எப்போது பூர்த்தியாகும்?

THE HON. SRI P. KAKKAN : Revised estimate for the work with reference to current schedule of rates has been technically sanctioned by the Chief Engineer (Highways) and the work is being taken up in anticipation of the approval of the Government of India for the revised estimate. It will be completed as early as possible.

SRI A. VEDARATHNAM : இந்த ரோடுக்காக மத்திய அரசாங்கத்திலிருந்து எவ்வளவு உதவி கொடுக்கப்படுகிறது? ஐந்தாண்டுகள் ஆகியும் இது இன்னும் எஸ்டிமேட் தயாரிப்பதிலேயே இருப்பதனால் இன்னும் எத்தனை ஆண்டுகளில் இது பூர்த்தியாகும்?

THE HON. SRI P. KAKKAN : மத்திய அரசாங்கம் முதலிலே நமக்குக் கொடுக்க ஒத்துக்கொண்டது நான்கு லட்சம் ரூபாய். மேலும் ஒரு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் ரூபாய் அதிகமாக வேண்டியிருந்தது. மறுபடியும் போடப்பட்ட ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் ஏழு லட்சம் ரூபாய் கொடுத்தால்தான்

[20th August 1960

மெட்டல் ரோடு போட்டு, ப்ளாக்டாப் போடுவதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். இப்போதுள்ள நிலைமையில் வேலையை எடுத்துக்கொண்டு பிறகு வேண்டுமானாலும் அங்கிகாரம் பெறலாம் என்று இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : நான்கு லட்சத்திற்கு போடப்பட்ட திட்டமானது இப்பொழுது ஏழு லட்சமாக உயர்ந்தது. திட்டம் போட்ட காலத்திலே அதை எடுத்துக்கொண்டு அதிக காலதாமதம் செய்யாமல் அப்போதே அந்த வேலையைப் பூர்த்தி செய்திருந்தால் இத்தகைய கஷ்டம் நேர்ந்திராது அல்லவா?

THE HON. SRI P. KAKKAN : நான்கு லட்சம் ரூபாயில் திட்டத்தை ஆரம்பித்திருந்தால் வேலையே நடந்திருக்காது. எப்படியும் ரோடு போடுவதுதான் போடுகிறோம், நல்லமுறையில் போடவேண்டும் என்பதற்காகவே காலதாமதம் செய்யப்பட்டது.

Jeeps for Assistant Engineers

* 329 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. R. VISWANATHAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there was any proposal for supply of jeeps to each of the Assistant Engineers (Public Health) employed under the Rural Water-supply Comprehensive Programme and the Local Development Works Programme; and

(*b*) if so, why it was not given effect to?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The proposal was deferred for want of funds.

SRI S. M. ANNAMALAI : இப்படிக் கிணறுகள் வெட்ட டெக்னிகல் அசிஸ்டெண்டு வேண்டுமென்று கோரினால் அவர்கள் வந்து பார்ப்பதற்கே காலதாமதமாகிறது. அவர்களுக்கு ஜீப் இருந்தால் வேலை துரிதமாக நடைபெறும். அந்தக் காரணத்தை யொட்டியாவது அப்படிப்பட்டவர்களுக்கு ஜீப் வழங்க முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லோரும் ஜீப் வேண்டும் என்கிறார்கள். முக்கியமானவற்றிற்கு எல்லாம் கொடுத்து வருகிறோம். காலக்கிரமத்தில் இவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம்.

Foul smell from tanneries

* 330 *Q.*—**SRI S. M. ANNAMALAI :** கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதில ளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம் வாணியம்பாடிக்கு அருகாமையி லுள்ள வளையாம்பட்டு, கிரிசமுத்திரம் கிராமங்களுக்கருகில் தோல் கழுவுநீரில் துர்நாற்றத்தால் சுகாதாரம் பாதிக்கப் படுவதைத் தடுக்க அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?